வாய்மையே வெல்லும்

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 212/மா/2025**

**நாள்: 05.08.2026**

சு. தங்கராஜ், சென்னை --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–9
பெருநகர சென்னை மாநகராட்சி

(2) கட்டிட உரிமையாளர்,
கதவு எண் 6/11, பல்லாட் சங்கரன் தெரு,
மகாலிங்கபுரம், நுங்கம்பாக்கம்,
சென்னை–600 034. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 026, வடபழனி, N.G.O. காலனி, கதவு எண் 38/01 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சு. தங்கராஜ் என்பவரின் 24.05.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.05.2025 அன்று பெறப்பட்டு 212/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 026, வடபழனி, N.G.O. காலனி, கதவு எண் 38/01 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சு. தங்கராஜ் என்பவர் தனது 24.05.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

> “மேற்கண்ட முகவரியில் வசிக்கும் நான் சமூக ஆர்வலர். பொது மக்களுக்கான பொது பணிகளை சட்டரீதியாக செய்து வருகிறேன். நான் வடபழனியில் இருந்து எழும்பூருக்கு தினந்தோறும் வேலைக்கு சென்று வருவது வழக்கம் இப்படி இருக்கையில் கதவு எண் 6/11, மகாலிங்கபுரம் பல்லாட் சங்கரன் தெரு நுங்கம்பாக்கம், சென்னை 34 என்ற முகவரியில் உள்ள பழைய கட்டிடத்தில் மேல் தளத்தில் சுமார் 50 அடி அகலம் 50 அடி உயரம் ராட்சத இரும்பு தூண்கள் அமைத்து நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்ட ராட்சத டிஜிட்டல் பேனர்கள் அமைக்கப்பட்டுள்ளதை இம் மனுவுடன் இணைக்கப்பட்ட புகைப் படங்களில் காணலாம். இதனால் அவ்வழியாக தினம் வேலைக்கு சென்று வரும் என் மீதும் மற்றும் பொதுமக்கள் மீதும் டிஜிட்டல் பேனர் விழுந்து உயிர் பலிகள் ஏற்படுமோ என்ற அச்ச நிலை உள்ளது.
>
> இது சம்பந்தமாக சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டு அறை 1913 எண்ணுக்கு கடந்த 7.2.2025 தேதி அன்று புகார் அளிக்கப்பட்ட சான்று இணைப்பு. இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை. ஆகவே, ஐயா, அவர்கள் மனித உயிர்களுக்கு தீங்கு ஏற்படும் வகையில் உள்ள ராட்சத இரும்பு தூண்கள் மற்றும் டிஜிட்டல் பேனர்களை அகற்ற உத்தரவிடக் கோரி தன்நலம் பொது நலம் கருதி இப்புகார் மனு அளிக்கிறேன்.”

2. மேற்கண்ட புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 20.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால், அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 07.07.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 29.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பப்பட்ட பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையர் தனது 06.07.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"திரு. சு. தங்கராஜ் அவர்கள் 10.01.2025 அன்று PGR Complaint அளிக்கப்பட்டது. அதன்படி கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அக்கட்டிடம் அனுமதி பெறப்பட்டு கட்டப்பட்டுள்ளது என பதில் அளிக்கப்பட்டது. தற்போது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்பில் மனுதாரர் நீதிமன்றத்தில் தடை செய்யப்பட்ட டிஜிடல் பேனர் அகற்ற புகார் மனுவிற்கு உரிய விளக்கம் அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

தற்போது வைக்கப்பட்டுள்ள பேனர் உரிய முறையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று வைக்கப்பட்டுள்ளது என தங்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. பேனர் அனுமதி பெறப்பட்ட கடித நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் மேற்கண்ட இப்பதிலினை ஏற்றுக் கொள்ளுமாறு பணிந்து கேட்டுக் கொள்ளப்படுகிறது."

5. மனுதாரர் 07.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"நான் வடபழனியில் இருந்து எழும்பூருக்கு தினந்தோறும் பள்ளி குழந்தைகளை என்னுடைய ஆட்டோவில் பள்ளிக்கு அழைத்து செல்வது வழக்கம். சென்னை–600 034, நுங்கம்பாக்கம், மகாலிங்கபுரம் பல்லாட் சங்கரன் தெரு கதவு எண் 6/11 என்ற முகவரியில் உள்ள பழைய கட்டிடத்தின் மேல் தளத்தில் சுமார் 50 அடி அகலம், 50 அடி உயரம் ராட்சத இரும்பு தூண்கள் அமைத்து நீதிமன்றத்தால் தடை செய்யப்பட்ட ராட்சத டிஜிட்டல் பேனர்கள் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு சென்று வருகையில் மேலே குறிப்பிட்டுள்ள டிஜிட்டல் பேனரிலிருந்து இரும்பு ராடு உடைந்து என் ஆட்டோ மீதும், அருகில் சைக்கிளில் சென்றவர் மீதும் விழுந்தது. இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9 அலுவலகத்தில் பலமுறை புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும், எங்கு வேண்டுமானாலும் புகார் அளித்துக்கொள் என்று அலட்சியமாக பதில் கூறுகிறார்கள். எனவே, மனித உயிர்களுக்கு தீங்கு ஏற்படும் வகையில் உள்ள ராட்சத இரும்பு தூண்கள் மற்றும் டிஜிட்டல் பேனர்களை உடனடியாக அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

6. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் 07.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"மனுதாரர் குறிப்பிடப்பட்டுள்ள டிஜிட்டல் பேனர் முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியிடம் 13.01.2025ல் அனுமதி பெற்று அமைக்கப்பட்டுள்ளது. 2027வரை இவ்வனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட அனுமதி அரசாணை நிலை எண்.45 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.04.2023ன்படி அளிக்கப்பட்டுள்ளது.

இன்றைய விசாரணையில் மனுதாரர் மேற்கண்ட டிஜிட்டல் பேனரின் ராடு உடைந்து விழுந்ததாக குறிப்பிட்டார். ,இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ல் புகார் ஏதும் பெறப்படவில்லை. இருப்பினும் மேற்கண்ட டிஜிட்டல் பேனரை Structural Engineer மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கொண்டு ஆய்வு செய்து பாதுகாப்புக்கு மாறாக இருப்பின் அதனை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.''

7. இரண்டாம் எதிர்மனுதாரர் 07.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், முதலாம் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை, உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை–600 034, நுங்கம்பாக்கம், மகாலிங்கபுரம், பல்லாட் சங்கரன் தெரு, கதவு எண் 6/11 என்ற முகவரியில் உள்ள பழைய கட்டிடத்தின் மேல் தளத்தில் சுமார் 50 அடி அகலம், 50 அடி உயரம் கொண்ட ராட்சத இரும்பு தூண்கள் அமைத்து நீதிமன்றத்தால் தடைசெய்யப்பட்ட ராட்சத டிஜிட்டல் பேனர்கள் அமைக்கப்பட்டுள்ளது என்பதும், அப்பகுதியில் சென்று வருகையில் மேலே குறிப்பிட்டுள்ள டிஜிட்டல் பேனரிலிருந்து இரும்பு ராடு உடைந்து மனுதாரர் ஆட்டோ மீதும், அருகில் சைக்கிளில் சென்றவர் மீதும் விழுந்தது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9 அலுவலகத்தில் பலமுறை புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும், மனித உயிர்களுக்கு தீங்கு ஏற்படும் வகையில் உள்ள ராட்சத இரும்பு தூண்கள் மற்றும் டிஜிட்டல் பேனர்களை உடனடியாக அகற்ற பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு உத்தரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தன்னுடைய மனுவில் குறிப்பிட்டுள்ள டிஜிட்டல் பேனர் முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியிடம் 13.01.2025ல் அனுமதி பெற்று அமைக்கப்பட்டு, இவ்வனுமதி 2027 வரை அளிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட அனுமதி அரசாணை நிலை எண்.45 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.04.2023ன்படி அளிக்கப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் மேற்கண்ட டிஜிட்டல் பேனரின் ராடு உடைந்து விழுந்ததாக குறிப்பிட்டது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ல் புகார் ஏதும் பெறப்படவில்லை என்றாலும், மேற்கண்ட டிஜிட்டல் பேனரை Structural Engineer மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கொண்டு ஆய்வு செய்து பாதுகாப்புக்கு மாறாக இருப்பின் அதனை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் முதலாம் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள சென்னை–600 034, நுங்கம்பாக்கம், மகாலிங்கபுரம், பல்லாட் சங்கரன் தெரு, கதவு எண் 6/11 என்ற முகவரியில் அமைக்கப்பட்ட டிஜிட்டல் பேனர் முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியால் அரசாணை நிலை எண்.45 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12.04.2023ன்படி 2027 வரை அனுமதி அளிக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் மேற்கண்ட டிஜிட்டல் பேனரின் ராடு உடைந்து விழுந்ததாக குறிப்பிட்டது குறித்து புகார் ஏதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ல் பெறப்படவில்லை என்றாலும், மேற்கண்ட டிஜிட்டல் பேனரை Structural Engineer மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை கொண்டு ஆய்வு செய்து பாதுகாப்புக்கு மாறாக இருப்பின் அதனை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் தங்களுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளவும், அதன் அறிக்கையினை ஒரு மாத

காலத்திற்குள் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு சமர்ப்பித்திடவும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையருக்கு அறிவுறுத்துமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள்05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. சு. தங்கராஜ்,
கதவு எண் 38/01 , N.G.O. காலனி,
வடபழனி, சென்னை–600 026.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) உதவி ஆணையர், மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 4, 4வது குறுக்கு தெரு,
லேக்வியூ ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை–600 034.

(4) கட்டிட உரிமையாளர்,
கதவு எண் 6/11,
பல்லாட் சங்கரன் தெரு,
மகாலிங்கபுரம், நுங்கம்பாக்கம்,
சென்னை–600 034.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.